**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை – நடப்பதில் சிரமம் உள்ள 1000 மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கு நடைப் பயிற்சி உபகரணம் (Rolator / Walker) வாங்கி வழங்குவதற்காக 2017–18 ஆம் நிதியாண்டு ரூ.10,00,000/– நிதி ஒப்பளிப்பு வழங்கி – ஆணை– வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நலத் (மா.தி.ந.2.1) துறை

அரசாணை(நிலை) எண்.32

நாள்: 01–09–2017
ஹேவிளம்பி, ஆவணி 16,
திருவள்ளுவர் ஆண்டு 2048

படிக்கப்பட்டது:-

1. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–ன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பு நாள் 29.06.2017
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் ந.க.எண்.2265/உ.உ. பிரிவு/2017, நாள் 01.07.2017.

----------

**ஆணை:**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட சட்டமன்றப் பேரவையில், பேரவை விதி எண்.110–ன் கீழ், 29.06.2017 அன்று மாற்றுத் திறனாளிகளுக்கு மேலும் பயனளிக்கக் கூடிய வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏனையவற்றுள் கீழ்கண்டவாறு அறிவிப்பு செய்துள்ளார்கள்:-

“கை, கால்கள் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு முடநீக்கியல் சாதனங்கள், ஊன்றுகோல்கள் மற்றும் செயற்கை அவயங்கள் வழங்கப்பட்டு அவர்களுடைய சுதந்திரமான நடமாட்டத்திற்கு ஏதுவாக பல்வேறு வகையான மறுவாழ்வு பணிகள் மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கால்கள் பாதிக்கப்பட்ட மூன்று வயதிற்குட்பட்ட மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கு நடக்க உதவும் நடைபயிற்சி உபகரணங்கள் (Rolator/Walker) நடப்பாண்டில் 1000 குழந்தைகளுக்கு 10 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.”

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவில், 2017–18 ஆம் நிதியாண்டில் கால்கள் பாதிக்கப்பட்ட மூன்று வயதிற்குட்பட்ட மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கு நடக்க உதவும் நடைபயிற்சி உபகரணங்களை (Rolator / Walker) ஒன்றின் விலை ரூ.1,000/– மதிப்பில் 1000 குழந்தைகளுக்கு (ரூ.1,000/– x 1000 எண்ணிக்கைகள்) வழங்குவதற்காக ரூ.10,00,000/– வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. 29.06.2017 அன்று சட்டமன்றப் பேரவையில், பேரவை விதி எண்.110–ன் கீழ், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினை தொடர்ந்து மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை நன்கு பரிசீலனை செய்த அரசு அதனை ஏற்று, 2017–18 ஆம் நிதியாண்டில் கால்கள் பாதிக்கப்பட்ட மூன்று வயதிற்குட்பட்ட மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கு நடக்க உதவும் நடைபயிற்சி உபகரணங்களை (Rolator / Walker) ஒன்றின் விலை ரூ.1,000/– மதிப்பில் 1000 குழந்தைகளுக்கு (ரூ.1,000/–x1000 எண்ணிக்கைகள்) வழங்குவதற்காக ரூ.10,00,000/– (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து ஆணையிடுகிறது. மேலும் கீழ்காணும் அறிவுரைகளை பின்பற்றுமாறும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(i) மேலே பத்தி 2–ல் தெரிவிக்கப்பட்டுள்ள மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கு நடக்க உதவும் நடைபயிற்சி உபகரணங்களை (Rolator / Walker) தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000–ன் படி திறந்த ஒப்பந்த புள்ளி மூலம் கொள்முதல் செய்திட அனுமதிக்கப்படுகிறது.

(ii) மேற்படி நடைபயிற்சி உபகரணங்களை மேலே பத்தி 3–ல் குறிப்பிட்டுள்ள தோராய விலைக்குள் மட்டுமே முறைப்படி கொள்முதல் செய்யப்பட வேண்டும்.

4. மேலே பத்தி 3ல் அனுமதிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2235 – சமூக பாதுகாப்பும் நலனும் – 02 சமூக நலன் 101 – மாற்றுத் திறனாளிகள் நலன் – மாநிலச் செலவினங்கள் – CO - மாற்றுத் திறனாளிகளுக்கான மறுவாழ்வு திட்டம் 19 – இயந்திரமும் சாதனமும் 01 வாங்குதல்".
(த.தொ.கு. 2235–02–101–CO-1917)

5. மேலே பத்தி–3ல் ஒப்பளிப்பு செய்ப்பட்ட தொகை ரூ.10,00,000/–க்கு தேவையான நிதியொதுக்கம் 2017–18 ஆம் ஆண்டு திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். அவ்வாறு நிதியொதுக்கம் செய்யப்படுவதை எதிர்நோக்கி இச்செலவினத்தை மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும் இச்செலவினத் தொகையை 2017–18 ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்திற்கான கருத்துரு உரிய நேரத்தில் நிதித்(சந) துறைக்கு அனுப்பும் போது தவறாது சேர்க்குமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை நிதித்துறையின் அ.சா. எண்.42312/நிதி(சந)/2017, நாள் 17.08.2017 மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண்.1242 (ஆயிரத்து இருநூற்று நாற்பத்து இரண்டு) ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**முகமது நசிமுத்தின்,**
**அரசு முதன்மைச் செயலாளர் (மு.கூ.பொ.)**

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–5.
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள்(மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–35.
முதன்மை மாநில கணக்காயர் (கணக்குகள் மற்றும் உரிமைத் தொகை), சென்னை–18.

**நகல்:**
நிதித் (சமூக நலம்/வ.செ.பொ.II) துறை. சென்னை–9.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டம்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
இருப்புக் கோப்பு/ உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.